


ஆர்டர் கொடுத்தார்கள். பிளாஸ்டர் ஆஃப் பாரிஸில் பிரமாண்டமாக, பத்தடி விட்டத்துக்கு ஒரு பெரிய தாமரைப்பூ செய்து கொண்டுவந்து ஆசிரமத்தின் நடுவே வைக்கப்பட்டது. கவனமாகத் தாமரையின் நடு இதழ்களை நீக்கிவிட்டு, அங்கே ஒரு பஞ்சுத் தலையணை வைத்துப் புதைக்கப்பட்டிருந்தது. ஷோகோ முனிவர் சௌகரியமாக நடுவே உட்கார்ந்து பிரசங்கம் பண்ண வேண்டாமா? இரண்டு பக்கமும் ராட்சஸ மின்விசிறிகள் பேயாகச் சுழன்று காற்று வீசின. ஜம்மென்று ஷாம்பு போட்டுக் குளித்துவிட்டு, கூந்தலைப் பறக்கவிட்டபடி ஷோகோ வந்து தாமரையின் மீது ஏறி அமர்ந்தார்.

பக்தர்கள் ஓம் ஓம் என்று தலைக்கு மேலே கைகூப்பி பஜனை பாடினார்கள். சில வினாடிகள் அந்த ஓங்காரம் ஹாலை நிறைக்க, ஷோகோ கையை உயர்த்தி அவர்களை அமைதிப்படுத்தினார். 'வரச்சொல்லியிருந்த பத்திரிகையாளர் வந்திருக்கிறாரா?'

'உள்ளேன் ஐயா.'

நல்லது. ஆரம்பிக்கலாம். ஷோகோ தொண்டையைச் செருமிக்கொண்டார். கண்களை மூடிக்கொண்டார்.

'நான் சொல்வதைக் கேளுங்கள். இதுதான் இறுதி. எனக்குப் பிறகு உங்களுக்கு யாரும் எச்சரிக்கை கொடுக்கப்போவதில்லை. சிந்திப்பதற்குக் கூட உங்களுக்கு நேரமிருக்கப் போவதில்லை. அழிவின் கோரத் தாண்டவம் என்பது எப்படி இருக்கும் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது. குழந்தைகளையும் சொத்துகளையும் தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு தெருத்தெருவாக அடைக்கலம் தேடி ஓடுவீர்கள். அப்போது உங்களை அரசாங்கம் கைவிடும். ஆட்சியாளர்கள் கைவிட்டுவிடுவார்கள். அண்டை நாடுகள் ஓநாய் மாதிரி வாய்பிளந்து எல்லைப்புறங்களில் காத்து நிற்கும். நீங்கள் எல்லை கடக்கும்போது, அவர்கள் பசிக்கு இரையாவீர்கள். நான்கு புறமும் கடலால் சூழ்ந்த ஜப்பானின் கரையோரங்களெல்லாம் எலும்புத் துண்டுகள் மிதக்கப்போகின்றன. உங்கள் மரணம் சம்பவிக்கும் வினாடிக்கு முந்தைய கணம், உங்கள் வீடு வாசல்கள் பற்றியெரியும் காட்சியைக் காண்பீர்கள். இதற்குமேல் ஒன்றுமில்லை. இறுதிக்கட்டம் என்பது இதுதான். அழிவு. பேரழிவு. சகிக்கமுடியாத பெரும் அழிவு.'

'ஐயோ, குருஜி' என்று அத்தனை பேரும் அலறினார்கள். அழைப்பின்பேரில் வந்திருந்த Twilight Zone என்கிற பத்திரிகையின் நிருபர், பரபரப்படைந்து உலக அழிவுக்கு முன்னால் ஷோகோவைச் சில போட்டோக்கள் எடுத்துக்கொள்ள விரும்பி, அந்தத் தாமரை செட்டில் அவர் உட்கார்ந்திருந்த போஸை விதவிதமான கோணங்களில் சுட்டுத் தள்ளிக்கொண்டிருந்தார்.



மவுண்ட் ஃப்யூஜியில் ஷோகோவின் ஆய்வுச்சாலைக்குப் போகும் வழி...

'மகனே, என்னை எதற்கு உன் ஒளிச்சுருளில் அடைத்துக்கொள்ள நினைக்கிறாய்? நான் நிரந்தரமானவன், அழிவதில்லை. எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை. உலக அழிவுக்குப் பின் நீ பிழைத்திருந்தால் வந்து என்னைப் பார். அப்போது நிதானமாக ஒரு போட்டோ ஷூட் வைத்துக்கொள்ளலாம். இப்போது நான் சொல்வதை மட்டும் கவனமாகக் கேட்டுக்கொள்.'

'அப்படியா? என்ன ஆச்சர்யம்? நீங்கள் அழிவில் சிக்கமாட்டீர்களா?'

ஷோகோ சிரித்தார். 'குழந்தாய்! இதென்ன விளையாட்டு? ஒவ்வொரு பேரழிவின்போதும் புவியின் எச்சங்கள் என்று சில காப்பாற்றப்படும் என்கிற விஷயம் உனக்குத் தெரியாதா? நோவாவின் கதையை நீ படித்ததில்லையா? அவனது பேழை குறித்துக் கேள்விப்பட்டதில்லையா?'

'ஆம். பைபிளில் அப்படி ஒரு கதை இருப்பதாக..'

'கதையல்ல குழந்தாய். அதுதான் உண்மை. அதுவே சத்தியம். நான் இருபதாம் நூற்றாண்டின் நோவா. பேரழி விலிருந்து தப்பிக்க இறைவன் தேர்ந்தெடுத்திருக்கும் மிகச் சிறு கூட்டத்தைத் தலைமை தாங்கப் போகிறவன் நான்.'

ரிப்போர்ட்டர் சுற்றுமுற்றும் பார்த்தார். எங்காவது நோவாவின் பேழையின் நவீன வர்ஷன் இருக்கிறதா?

ஷோகோ புன்னகை புரிந்தார். அந்த நிருபரைக் கூட்டத்திலிருந்து எழுந்து தன் அருகே வரச்சொல்லி சைகை செய்தார். அவர் கையில் அப்போது ஒரு செய்திப்பத்திரிகை ஒன்று முளைத்திருந்தது.

'இந்த பேப்பரை நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா? இந்த ஐந்தாம் பக்கம்? இதில் ஒரு வரலாற்றாசிரியர் எழுதியிருக்கும் கட்டுரை ஒன்று வெளியாகியிருக்கிறது. எத்தனை பேர் அதனைப் பார்த்தீர்கள்?' என்று கேட்டார்.

பலபேர் பார்த்திருந்தார்கள். தன்னை நாஸ்டிரடாம்ஸின் மறு அவதாரமாகக் கருதிக்கொண்ட ஒரு ஹிஸ்டரி கோயிஞ்சாமி, அதில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். உலகம் அழியப்போகிறது. மீட்சிக்கு வழியில்லை.

'நான் மட்டும் சொல்லவில்லை நண்பர்களே! இதோ பாருங்கள். ஒரு வரலாற்றுப் பேரறிஞர் சொல்லியிருக்கிறார்! அவருமா பொய் சொல்வார்? அறிஞர்களையும் மகான்களையும் வாழும் காலத்தில் நீங்கள் பொருட்படுத்துவதில்லை. செத்த பிறகு மறக்காமல் சிலை வைத்துவிடுகிறீர்கள். இது மிகவும் தவறான அணுகுமுறை. இப்போது உங்களுக்கு இறுதி வாய்ப்பளிக்கிறேன். நான் சொல்வதைக் கேளுங்கள். உலகம் அழியத்தான் போகிறது. நான் தப்பிக்கப்போகிறேன். நான் என்றால், என்னோடு இருக்கிறவர்களையும் சேர்த்து.'

பக்தர்கள் பரவச நிலையின் உச்சத்துக்குப் போனார்கள். என்ன சொன்னாலும் தலையாட்டுவோம் என்று மௌனத்தால் வாக்களித்தார்கள்.

'சரி, கேளுங்கள். நேற்றிரவு என் கனவில் கடவுள் வந்தார். அடிக்கடி வந்து போகிறவர்தான்.

ஆனால் நேற்று ஒரு செய்தியுடன் வந்தார். அழிவு சக்திகள் நம்மை சம்ஹாரம் செய்யத் தயாராகிவிட்டன. எதிர்த்து நிற்க உலகில் வேறு யாரும் தயாரில்லாத நிலையில், இறைவனே ஒரு படையை நிறுவுகிறார். அந்தப் படைக்கு என்னைத் தலைமை ஏற்கச் சொல்லியிருக்கிறார். என் படையின் வீரர்களாகச் சேர உங்களில் எத்தனை பேர் தயார்?'

அவர் பேசிக்கொண்டிருந்தபோதே, அந்த வரலாற்று கோயிஞ்சாமி பரபரவென்று ஆசிரமத்துக்கு வந்தார். ஷோகோ புன்னகை செய்தார். 'வாருங்கள். வாருங்கள்.'

'நான் கண்டுபிடித்துவிட்டேன். உலக அழிவைத் தடுத்து நிறுத்தப்போகிற மாபெரும் சக்தி நீங்கள்தான். அழிவுக்குப் பின் மிஞ்சி நிற்கப்போகிற ஒரு சிறு மனிதக்குழு ஜப்பானில்தான் இருக்கப்போகிறது. நீங்களே அந்தக் குழுவின் தலைவர்!' என்று சொல்லி ஷோகோவின் பாதங்களில் விழுந்து பணிந்தார்.

'பார்த்தீர்களா! எத்தனை பெரிய வரலாற்று அறிஞர். தவிரவும் தீர்க்கதரிசி. என்ன சொல்கிறார் என்று பார்த்தீர்களா?' ஷோகோ கேட்டார்.

'ஆமாஞ்சாமி' என்றார்கள் பக்தர்கள்.

இந்த உணர்ச்சிகரமான நாடகத்தின் முடிவில் ஷோகோ தன் கணிப்புகளைச் சொல்ல ஆரம்பித்தார்.

'இது என்ன வருடம்? 1999 அல்லவா? எழுதி வைத்துக் கொள்ளுங்கள். 2003-ம் ஆண்டுக்குள் உலகில் ஒரு மாபெரும் அணு ஆயுத யுத்தம் நிகழப்போகிறது. அதுதான் ஆரம்பம். அதுதான் இறுதியும் கூட. அணுவை என்ன செய்துவிட முடியும் நம்மால்? ஒன்றும் செய்யமுடியாது. அடிபணிந்து அழிவதுதான் ஒரே வழி. ஆனால், இன்னொரு வழி இருக்கிறது. ஓம் ஷின்ரிக்கியோ இருக்கிற இடத்தை அணுக்கதிர்கள் ஒன்றும் செய்யாது. ஒவ்வொரு தேசத்திலும் நீங்கள் ஓம் கிளை ஒன்றைத் திறந்துவிடுகிற பட்சத்தில், அத்தனை தேசங்களும் பாதுகாக்கப்படுவது உறுதி. என் பக்தர்கள் பரவியிருக்கிற இடமெங்கும் என் பார்வை விரியும். என் பார்வைக்கு உட்பட்ட அத்தனை பேரும் பாதுகாக்கப்படுவார்கள். நமது படை பாதுகாக்கப்பட்ட பிறகுதான் தீய சக்திக்கு எதிராக நாம் யுத்தம் தொடுக்க முடியும்.'

ஆமாம், ஆமாம் என்று பக்தர்கள் சிந்து பாடினார்கள். உடனடியாக என்ன செய்யவேண்டும்? ஒரு படை. மிகப்பெரிய ராணுவத்தை உருவாக்க வேண்டும். அதற்கு நிறைய பணம் வேண்டும். இன்னும் நிறைய.

பக்தர்கள் கொண்டு வந்து குவிக்க ஆரம்பித்தார்கள். ஷோகோ தன் ஆசிரமத்தின் இளம் மாணவ பக்தர்களிடம் ஒரு விஷயம் சொல்லி வைத்தார். 'தண்டச் செலவுகள் செய்யாதீர்கள். கிடைக்கிற ஒவ்வொரு பைசாவையும் கொண்டுவந்து சேருங்கள். உலகத்துடன் உங்கள் தொடர்புகளை முடித்துக் கொள்ளுங்கள். இனி கவனம் முழுவதும் ஓம், ஓம், ஓம். அவ்வளவே. உங்களது அச்சமே உங்களைக் கொல்லாமலிருக்க நான் ஒரு தாயத்து தருகிறேன். அது உங்களிடம் இருக்கும்வரை எந்தத் தீய சக்தியும் உங்களைத் தீண்டாது!'

ஷோகோவின் தாயத்து என்பது ஒரு செம காமெடி.

அத்தனை வருஷம் கஷ்டப்பட்டு எண்ணெய் தடவி உருவி உருவி வளர்த்துவந்த அவரது தாடி, அப்போது செழித்து ஜோராக வளர்ந்திருந்தது. அதிலிருந்து கரெக்டாக அரை இஞ்சுக்கு ஒரு முடியை கத்திரிக்கோலால் வெட்டி எடுத்துத் தருவார். பக்தர்கள் அதை பயபக்தியுடன் பெற்றுக்கொண்டு 375 டாலர் காணிக்கை தரவேண்டும்.

இந்த பிசினஸ் என்ன வேகமாகப் போனது என்கிறீர்கள்? ஒரே வாரத்தில் ஷோகோ, ஷாருக்கான் மாதிரி மழமழவென்று கன்னத்தைத் தடவவேண்டியதாகி விட்டது. ஒரு முடியில் 6 தாயத்துகள். அல்லது ஏழு தாயத்துகள். மொத்தம் இருந்த முடி எத்தனை என்று தெரியாது. ஆனால், இந்த தாடி-தாயத்து வழியில் மட்டும் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் டாலர் சேர்த்துவிட்டார் ஷோகோ.

போதாதே? வேறென்ன செய்யலாம் என்று யோசித்து பாவம் போக்கும் ஆகாயகங்கை ஜலத்தைத் தருகிறேன் என்று சொன்னார்.

அதாகப்பட்டது, தினமும் ஷோகோ ஒரு பெரிய வட்டத்தொட்டி நிறைய தண்ணீர் நிரப்பி, அதில் முங்கித்தான் குளிப்பார். தண்ணீருக்குள் இருந்தபடியே சோப்பு போட்டுக்கொள்வார். அப்படியே குளித்து முடித்து எழுந்து வெளியே வந்த பிறகு, அந்தத் தொட்டியைப் பார்த்தால் எருமை புரண்டு எழுந்த சாக்கடை மாதிரி இருக்கும்.

அபசாரம். அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. அதுதான் ஆகாயகங்கை. தினசரி இரண்டாயிரம் சாஷேக்களில் இந்த ஆகாயகங்கை அடைக்கப்பட்டு தலா 800 டாலருக்கு விற்கப்பட்டது.

இந்தக் கூத்தெல்லாம் நடந்துகொண்டிருந்த அதே சமயம், ஃப்யூஜி என்கிற ஜப்பானின் மிகப்பெரிய எரிமலையின் ஓரத்தில் (Mount Fuji) பல ஏக்கர் கணக்கில் நிலத்தை வளைத்துப்போட்டு மிகப்பெரிய மருத்துவமனை ஒன்றையும் பல்வேறு ரகசிய ரசாயன ஆய்வுக் கூடங்களையும் ஷோகோவின் அடிப்பொடிகள் கட்ட ஆரம்பித்தார்கள். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து திறமை மிக்க ரசாயன ஆயுத வல்லுநர்களும், உயிரியல் விஞ்ஞானிகளும் அணு ஆயுத விஞ்ஞானிகளும் இன்ஜினீயர்களும் அங்கே ரகசியமாகத் தருவிக்கப்பட்டார்கள்.

ஜப்பானின் கியோட்டோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த மிக உத்தமமான உயிரியல் பேராசிரியர் சீச்சீ எண்டோ (Seiichi Endo) என்பவர் அசந்தர்ப்பமாக ஷோகோவின் பக்தராகி, தன் வேலையை விட்டுவிட்டு ஷோகோவின் உயிரியல் ஆய்வுச் சாலையின் தலைமைப் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்.

அது ஒரு மாபெரும் வியப்புத்தான். எண்டோவைப் போல நூற்றுக்கணக்கான உயிரியல் விஞ்ஞானிகள், வேதியியல் விஞ்ஞானிகள், இயற்பியல் வல்லுனர்கள், எலக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படித்தவர்கள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள் என்று அவரிடம் வந்து குவிந்த அத்தனை பேருமே ப்ரொஃபஷனல்களாகவே இருந்தார்கள். ஹிதியோ முராய் (Hideo Murai) என்கிற விஞ்ஞானியை அந்நாளில் ஜப்பானியர்கள் தலைக்குமேல் தூக்கிவைத்துக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அமெரிக்காவுக்கு ஒரு ஐன்ஸ்டைன் மாதிரி நமக்கு ஒரு முராய் என்று சொல்லுவார்கள். ஆனால், என்ன ஆச்சு? அவரும் ஷோகோ சரணம் கச்சாமி என்று வந்து விழுந்து விட்டார். அந்த சாகமோடோ லாயர் கொலை வழக்கில் மாட்டினாரே நினைவிருக்கிறதல்லவா? அவரேதான்.

ஓம் ஷின்ரிக்கியோ ஆசிரமத்தில் தங்கிப் படித்து, தக்க சமயத்தில் தப்பித்து வெளியேறிய டேவிட் கப்ளான், ஆண்ட் ரூ மார்ஷல் என்கிற இரண்டு மாணவர்கள் மூலம்தான் இந்த விஷயங்களெல்லாம் உலகுக்குத் தெரிய வந்தன.

அது ஒருபுறமிருக்க, ஏற்கெனவே ரஷ்யாவில் ஷோகோவுக்கு இருந்த செல்வாக்கு குறித்துப் பார்த்திருக்கிறோமல்லவா? இப்போது செயல் என்று ஷோகோ களத்தில் இறங்கிவிட்டதும் முதல் காரியமாக ரஷ்யாவில் இருந்து ஏராளமான விஞ்ஞானிகளையும் இன்ஜினீயர்களையும் ஜப்பானுக்கு வரவழைக்கும் பணியில் இறங்கினார்.
இதில் ஒரு காமெடி என்னவென்றால், ஷோகோவின் இம்முயற்சிக்குப் பேருதவி புரிந்தவர், அந்நாளைய ரஷ்ய பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றிக்கொண்டிருந்த பாவெல் கிரசேவ்.